பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
07 10 2024 **MONDAY** **7.15 PM**
ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- மாலத்தீவுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பாதுகாப்புத்துறையில் சுயசார்பினை எட்டுவதற்கு தனியார் பங்களிப்பும் அவசியமாகிறது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.
- மேற்குவங்கத்தில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் நேரிட்ட வெடி விபத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர்.
- மருத்துவத்திற்கான நோபல் பரிசு அமெரிக்காவின் Victor Ambros மற்றும் Gary Ruvkun –க்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- உலக ஜுனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

*-- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<>>>>>

மாலத்தீவுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் மாலத்தீவு அதிபர் டாக்டர் Mohamed Muizzu –வுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவு நூற்றாண்டுகால பழமையானது என்று பிரதமர் கூறினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின்போது பேசிய மாலத்தீவு அதிபர், இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான தொலைநோக்கு திட்டத்தை வகுப்பது என இந்த பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டதாக கூறினார்.

<<<<<<>>>>>

பாதுகாப்புத்துறையில் சுயசார்பினை எட்டுவதற்கு தனியார் பங்களிப்பும் அவசியமாகிறது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தியில் தனியார் நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பாதுகாப்புத்துறையில் கூடுதல் தொழில்நுட்பங்கள் பயன்பாட்டிற்கும் தற்போது ஊக்கம் அளிக்கப்படுவதாக திரு ராஜ்நாத் சிங் கூறினார்

<<<<<<>>>>>

விவசாயிகள் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வுகாணப்படும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

விவசாயிகள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த கூட்டத்திற்கு பின்னர் எமது செய்தியாளரிடம் பேசிய விவசாயிகள் சங்க தலைவர் திரு சத்தீஷ் Lambardar, தங்களின் கோரிக்கைகளை அமைச்சர் கவனத்துடன் கேட்டறிந்ததாகவும், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்ததாகவும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நிலக்கரித்துறையில் சுயசார்பினை எட்டுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

நாக்பூரில் உள்ள நிலக்கரி சுரங்கத்தின் தலைமையகத்தில் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

நிலக்கரி தேவையை பூர்த்தி செய்வதற்கு நிலக்கரி உற்பத்தி நிறுவனங்கள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்ட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

இந்தியாவும் - ஐக்கிய அரபு எமிரேட்ஸும் இணைந்து உணவு தொழில் வழித்தடத்தை ஏற்படுத்த முடிவு செய்துள்ளதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று மும்பையில இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான உயர்நிலை பணிக்குழு கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

விவசாயிகளுக்கு கூடுதல் வருவாயை ஈட்டி தருவதற்கு இந்த நடவடிக்கை உதவுடும் என்று அவர் ெரிவித்தார்

இதன்மூலம், கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் உணவு பூங்காக்களை ஏற்படுத்துவது குறித்தும் இந்த பணிக்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<>>>>>

பெட்ரோலியப் பொருட்களின் தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், தேவைக்கும் கூடுதலாக பெட்ரோலியப் பொருட்கள் கையிருப்பில் உள்ளதாக கூறினார்.

தேவையை பூர்த்தி செய்வதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் உணவுப்பொருட்களின் தரத்தை ஆய்வு செய்வதற்கென 100 பரிசோதனை மையங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாக மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சர்வதேச தரத்திற்கு இணையாக உணவுப்பொருட்கள் உற்பத்தி செய்வதை உறுதி செய்வதற்கு இந்த ஆய்வகங்கள் உதவிடும் என்றார்.

<<<<<<>>>>>

குறைந்த விலை தக்காளி விற்பனையை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

இன்று புதுதில்லியில் நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலர் திருமதி Nidhi Khare இந்த விற்பனையை தொடங்கிவைத்தார்.

இதன்படி, புதுதில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வாகனங்கள் மூலம் ஒரு கிலோ தக்காளி 65 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட உள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வெங்காய விலையையும் மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

நடப்பாண்டிற்கான மருத்துவத்திற்கான நோபால் பரிசு அமெரிக்காவின் Victor Ambros மற்றும் Gary Ruvkun –க்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மைக்ரோ ஆர் என் ஏ-வை கண்டுபிடித்ததற்காக இந்த விருது அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர் மற்றும் ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

இதனையொட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வாக்கு எண்ணும் மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

மேற்குவங்கத்தில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் நேரிட்ட வெடி விபத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர்.

Bhadulia நிலக்கரி சுரங்கத்தில் இன்று மாலை இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

நிலக்கரி சுரங்கம் தோண்டுவதற்கான பணிகளின்போது இந்த விபத்து நேரிட்டதாகவும் அவர்கள் கூறினர்.

<<<<<<>>>>>

சர்வதேச பருத்தி தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

இதனையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

<<<<<<>>>>>

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு, இன்று ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை, தாம்பரம், ஆவடி மாநகராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் அமைச்சர் இந்த ஆய்வினை மேற்கொண்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இப்பணிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாக அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

அமெரிக்காவை அச்சுறுத்தும் Milton புயல் நாளை மறுநாள் மாலை ஃபுளோரிடாவில் கரையை கடக்கக்கூடும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

Helene புயல் தாக்குதலுக்கு உள்ளான ஃபுளோரிடாவில் ஒரு மாத இடைவெளியில் இந்த Milton புயல் கரையை கடக்க உள்ளது.

இதன் காரணமாக, ஃபுளோரிடா மாகாணத்தில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஃபுளோரிடாவிலிருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஜுனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

பெருவின் லிமாவில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளில் ஆடவர் குழு பிரிவுகளில் இந்தியா ஒருதங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் Parisha Gupta வெள்ளிப்பதக்கத்தையும், Mukesh வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா 13 தங்கம், 3 வெள்ளி, 8 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தை பிடித்தது.

--------------

உலக ஜுனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Dhruv Negi இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் Nanchang –ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், அவர் 21-8, 21-14 என்ற செட் கணக்கில், Alex Petrovic –ஐ வென்றார்.

மற்றொரு ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் Numair Shaik 21-7, 21-10 என்ற செட் கணக்கில், போர்ச்சுக்கல்லின் Alexandre Dernardo –வை வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் Tanvi Sharma, 21-11, 21-9 என்ற செட் கணக்கில், ஹாங்காங்கின் Lee Hoi Lam Joan –ஐ வென்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் Bhavya Chhabra – Taarini Suri இணையும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---------------

ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டி கஜகஸ்தானின் அஸ்தானாவில் இன்று தொடங்கியது.

------

உகாண்டாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியா மூன்று தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

-----------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-5, 12-14, 11-4, 11-6 என்ற செட் கணக்கில் சுவிட்சர்லாந்தின் Wilhelmi –ஐ வென்றார்.

---------------

ஜிம்னாஸ்டிக் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்தியாவின் Dipa Karmakar அறிவித்துள்ளார்.

<<<<<<END>>>>>>